தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 16, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 செப்டம்பர் 1, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்”

நேர்மையும், நெஞ்சுறுதியும் ஒருவருக்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும், நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள், வினா எண் *131,* மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

131—

பேருந்து வசதி

***632—திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகாசி தொகுதி, ஆலங்குளம், வலையப்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி வழியாக ராஜபாளையம், திருவேங்கடம் வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, ஆலங்குளம், வலையப்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி வழியாக ராஜபாளையம், திருவேங்கடம் வழித்தடம் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக அதாவது, 33½ கிலோ மீட்டர் இருப்பதால், இதுவரை அங்கு நகரப் பேருந்து இயக்க முடியாத ஒரு நிலை இருந்தது. ஆயினும், 9–8–2006 அன்று மானியக் கோரிக்கையின்போது, நகரப் பேருந்தின் தூரம் 30 கிலோ மீட்டரிலிருந்து 35 கிலோ மீட்டர் என நீட்டித்து இயக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில், புதிய ஆணைகள் வெளியிடப்பட்ட பின், கோரிக்கை வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

திரு. ஆர். ஞானதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி, மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்பதால், இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகின்றேன். முன்பு முன்னாள் முதல்வர் அவர்களுடைய பயன்பாட்டிற்காக Cessna என்ற விமானம் வாங்கப்பட்டது. பிறகு அதை விற்பதற்குக் கழக ஆட்சியிலே முயற்சி செய்யப்பட்டது. தற்போது அந்த விமானத்தின் நிலை என்ன? ஏறக்குறைய 20 கோடி ரூபாய் செலவிலே வாங்கப்பட்ட அந்த விமானம் பயன்பாட்டில் இருக்கிறதா அல்லது விற்கப்பட்டு விட்டதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பொதுத் துறையின்கீழ் இயங்குகிறது. அதைப் பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் உங்களுக்குத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.